# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

சுடர் 08

விலை 20/=

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

புரட்டாதி இதழ்~2014 ,ஆரம்பம் 15மாசி~2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்~08

E-mail- catetcota@gmail.com

T.P- 026 2221022, 0263202532


"அமைதி எனும் விதையிலிருந்து நீதிஎனும் கனி விளைகிறது."

## ஆயரின் மறைக்கல்வி தினச் செய்தி



மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை முன்வைத்து தேசிய மறைக்கல்வி தினம் சிறப்பிக்கப்படுவது பெருமகிழ்வே. மறைஅறிவு எனும் போது பலதரப்பட்ட மறைந்துள்ள நிலைகளை வெளிகொணரும் ஞான அறிவியலாக இதனைக் கொள்ள முடிகின்றது. இந்த மறைக்கல்வியின் தொடக்க நிலையை நோக்கும் போது முதலில் குடும்பங்களிலிருந்தே மறைக்கல்வி ஊட்டப்படுகின்றது. செப வாழ்விலே குடும்பங்கள் காட்டுகின்ற அக்கறை, அல்லது முதன்மை இடம், அல்லது பங்களிப்பு இவைகளையே முதன்மையான மறை அறிவாகப் பிள்ளைகள் பெறுகின்றார்கள். குடும்பங்களிலே பெற்றோர்கன் கொடுக்கின்ற மறைக்கல்வி பிள்ளைகளின் எதிர்கால மறைக்கல்விக்கு ஆணிவேர் என்றோ அடித்தளமென்றோ கூறமுடிகின்றது.

இதனைத் **திருத்தந்தை 1ம் பிரான்சிஸ் இவ்விதமாக குறிப்பிடுகின்றார். "நான்பெற்ற நம்பிக்கை வாழ்வை தன் பிள்ளைகளுக்கு தொடர்ந்து கொடுக்கின்ற இடமாகிய குடும்பம் எத்துணை விலையேறப் பெற்றது, எத்துணை மாண்பு மிக்கது".**

இறைவன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை பெற்றோர்கள் வெளிப்படுத்தும் விதம் இதனை உற்று நோக்கும் பிள்ளைகளின் கண்கள் மறுகணமே பெற்றோர் காட்டும் நம்பிக்கைக்குள் பிள்ளைகளும் இறங்கிச் செற்படுவது குடும்பம் என்னும் குட்டித் திருச்சபைக்குக் கிடைத்த வெற்றிவாகை என்று கூறமுடிகின்றது.

அயலவரோடு உறவு, துன்புறுவோர்க்கு உதவி, பசித்தோர்க்கு உணவு, நோயாளரை பார்வையிடல், உதவுதல் இவைபோன்ற செயல்களை குடும்பங்களிலே காணும் குழந்தைகள் எதிர்காலத்திலே தாங்களும் இவ்வித செயற்பாடுகளில் இறங்கி வெளிக்காட்டும் போது இவைகள் பெற்றோர் ஊட்டிய மறைக்கல்வியின் வெற்றியாகக் கொள்ள முடிகின்றது.

மறைக்கல்வியிலே மறை அறிவை முதலிலே பெற்றோரிடமும் பின்னர் குருக்கள் ஆசிரியர்கள்! பெரியவர் நண்பர்கள் என பலரிடமும் பலவித நிலைகளையும், பலவித வழிகளிலும் பெறுகின்றார்கள்.

எனவே ஒவ்வொரு மாணவரும் இவைகளை உணரவும் காட்டும் வழிகளைத் தொடரவும் எதிர்காலத்திலே வளமான நிலைகளைக் காணவும் ஆசிகூறி வழிகாட்டிகளுக்கும் ஆசீரும் வாழ்த்துக்களையும் தேசிய மறைக்கல்வி தினத்திலே கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். இறைவன் உங்கள் அனைவரையும் என்றும் ஆசீர்வதிப்பாராக.

### திருகோணமலை தூய மரியாள் பேராலய உதவிப் பங்குத் தந்தையர்களுக்கு

நன்றியும்

அருட்பணி
வி.ஏ. ஜஸ்டின் அமதி



வரவேற்பும்

அருட்பணி ஏ.செபஸ்டியன்
றெவல் அமதி



இவர்களது
பணிவாழ்விற்காக
செபிக்கின்றோம்
வாழ்த்துகின்றோம்
நன்றி கூறுகின்றோம்

### பேராலய C.Y.A யினரும், வைத்திய சாலை கத்தோலிக்க சமூகமும் இணைந்து நடாத்திய இரத்ததான நிகழ்வு.



இடம் பேராலய கேட்போர் கூடம் 17.08.2014

## விண்ணுக்கு எட்வின் அ.ம.தி அடிகளார்



இறைபதம் அடைந்த அருட்பணி தேவதாசன் எட்வின் அ.ம.தி அடிகளாருக்கு எமது மறைமாவட்டம் சார்பாக **"திருமலைத் தீபம்"** ஆழ்ந்த அனுதாபத்தையும் அவரது ஆன்ம இளைப்பாறுதல் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"கிறீஸ்துவின் பங்காளிகளாவோம்" எபி. 3:14

# உங்களோடு பேசுகிறேன்..

மீண்டும் உங்களோடு பேச ஒரு வாய்ப்பு.... எங்கும் அமைதியும் சமாதானமும் நல்லுறவும் நல்லுணர்வும் தோன்றி நிலைகொள்ள வேண்டுவோம்.

காலத்தின் நிலைகளை நோக்கும் போது அனேகமாக எங்கும், எல்லாவற்றிலும் வன்முறைகளே பிரதான செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. இவைகள் மிகவும் வேதனையே.

அதேவேளை மதங்கள் சார்பான துறவிகளின் பேச்சுக்கள் நடந்துகொள்ளும் விதங்கள் தோற்றமளிக்கும் முறைகள் குறிப்பாக கைகளை உயர்த்தி தாக்குவது போன்ற தோற்றம் மிகவும் கொடுமையாகவும் கேவலமாகவும் தெரிகின்றன பொதுவாக எல்லாமே வெட்கித் தலைகுனிய வேண்டியதாயும் வேதனையடைய வேண்டியதாயும் உள்ளன. மதங்கள் கூறும் சிந்தனைகள் மகத்துவம் மிக்கவைகளே. ஆனால் அதைக் கடைபிடிக்கும் விதங்களோ அல்லது பின்பற்றும் முறைகளோ எங்களுக்கு உயர்வையோ, தாழ்வையோ தரக்கூடிய தொன்றாகும்.

நான் பின்பற்றும் மதத்தை நான் உண்மையாக நேசிக்கின்றேனென்றால் என் மதம் காட்டும் பாதைகளை நான் கடைபிடிக்க வேண்டும். தவறவிடக் கூடாது. "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பதைப் போன்று நம் வாழ்வுக்குள் முரட்டுத் தனங்களையும் பிடிவாதங்களையும் உள்வாங்கிக் கொண்டால் பிழைகள் கூட சரியானதாகவே தெரியும் இதனை மனதில் கொள்ள வேண்டும்.

இன்னும் பெற்றோர்கள் பிள்ளைகள் மட்டிலே மிகுந்த அக்கறை கொள்ளவேண்டிய காலமாய் உள்ளது. குறிப்பாக சிறுவருக்கு எதிராக எழுகின்ற வன்முறைகள் அதிகரித்துள்ளன. எனவே பெற்றோர்கள் ஆசிரியர்கள், பிள்ளைகள், மாணவர்கள் தொடர்பாக அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டி உள்ளது.

மனங்களில் இருந்து மனித நேயங்கள் மறைகின்ற போது அல்லது அழிகின்ற போது வன்முறைகள் தோன்றுவதற்கு வழியாகின்றன. ஒருவரை மதிப்பதோ அல்லது ஒருவருக்கு உதவுவதோ அல்லது ஒருவரோடு உறவாடுவதோ, ஒருவரின் துன்பத்திலோ இன்பத்திலோ பங்கு கொள்வதோஎதுவானாலும் அனைத்திற்கும் அடிப்படை மனித நேயமே ஆண்டவர் இயேசு கூறியது போன்று "புற நிலைகள் அல்லது புற பொருட்கள் எதுவும் ஒருவரை தீட்டுப்படுத்துவதில்லை ஆனால் ஒருவரின் வாயுள்ளிருந்து வெளிவருவதே அவரைத்தீட்டுப்படுத்துகின்றது." வெளிவரும் வார்த்தை நல்லதென்றால் கேட்பவர் அதைக் கேட்டு மகிழ்வார். ஆனால் வெளிவரும் வார்த்தை கடினமானால் கேட்பவர் கேட்டுக் கலங்குவது உண்மையே.

எனவே இக்காலத்திலே பல விடயங்களை உள்வாங்க வேண்டும். குறிப்பாக நமது சூழல், நமது பணித் தளங்கள், நம்மோடு உறவாடும் மக்கள் அனைவரோடும், அன்பை, மனித நேயங்களை, மனித மாண்புகளை அடித்தளமாக கொண்டு செயற்படும் போது நிச்சயமாக நமது வாழ்க்கைப் பயணத்தில் வெற்றிகளை நாம் காண்போம், சாதனைகளை நாம் சாதிப்போம் என்பது உறுதியாகும் எனக் கூறிக் கொண்டு,

**மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.**

**அருட்பணி NC அருள்வரதன்**



# இறந்த பின்னர் மீண்டும் உயிர்பெற்ற அருட்தந்தை

**மோட்சம் (விண்ணரசு)**

அதன்பின் எனது காவல்தூதர் என்னை ஒளி வீசும் நீளமான வெள்ளை சுரங்கப் பாதை வழியாக மோட்சத்திற்கு அழைத்துச் சென்றார். அத்தகைய அழகான, ஆறுதலான சுகமான அனுபவத்தை இதற்கு முன்னர் என்றுமே நான் அனுபவித்திருக்கவில்லை. அவ்வேளையில் வானகம் திறக்கப்பட்டு மிகவும் இனிமையான கீர்த்தனைகள் பாடப்படுவதைக் கேட்டேன். அத்தகைய இனிமையான பாடலை நான் இதற்கு முன்னர் கேட்டிருக்கவில்லை. வானதூதர்கள் குழு, கீர்த்தனைகளினால் இறை ஆண்டவருக்கு நன்றியும், புகழ்ச்சியும் பாடிக் கொண்டிருந்தார்கள். இங்கு நான் கண்ட முக்கியமானவர்கள் மரியன்னை, தூய சூசையப்பர் (தூய வளனார்), இவ்வுலகில் தம் வாழ்வை இறைவனுக்கு அர்பணித்திருந்த ஆயர்கள், குருக்கள், தூயவர்கள் ஆவர். அவர்கள் விண்மீன்களைப் போல் சுடர்விட்டுக் கொண்டிருந்தார்கள். அத்துடன் நான் இயேசு ஆண்டவர் முன்னிலையிலிருந்தேன். அவர், "உம்மை மீண்டும் உலகிற்கு அனுப்புவேன்" என கூறினார். மேலும் உமது இந்த இரண்டாம் வாழ்வில் நீர் அமைதியின் நல் ஆயுதமாக – எனது மக்களுக்கு அமைதியாக இருப்பீர். நீர் வெளிநாடுகளுக்குச் செல்வீர. எனது ஆசீர்வாதத்தினால் உமக்கு அனைத்தையும் செய்ய முடியும் என்றார். அதன் பின் மரியன்னை எனக்கு இவ்வாறு கூறினார். இயேசு சொல்வதெல்லாம் செய்யும். உமது அப்போஸ்தலிக்க பணிகளில் நான் உமக்கு உதவியாயிருப்பேன்.' வானகத்தில் நான் கண்ட அழகுமிகு காட்சியை வார்த்தைகளால் விளக்க முடியாது. எமக்கு நினைத்துப் பார்க்கவும் முடியாத – வாழ்க்கையிலே இதுவரை பெற்றிராத மேலான அமைதியை, மகிழ்ச்சியை நான் அங்கே அனுபவித்தேன். எந்த உருவ அழகிற்கும் ஒப்பிட முடியாத மிகவும் ரம்மியமான அழகிய உருவில் இயேசு ஆண்டவர் காணப்படுகிறார். அவரது முகம் ஒளியால் பிரகாசிக்கிறது. அது ஆயிரம் சூரியன் உதிப்பதைப் போல் அழகாக இருந்தது. நாம் இவ்வுலகில் காணுகின்ற அவரின் படங்கள் அவரது மேன்மையான உருவத்தில் நிழல் மட்டுமே. அவர் அந்தளவிற்கு ஒளியாய், வல்லமையுடையவரா யிருந்தார். நட்சத்திரத்தைப்போல் மின்னிக் கொண்டிருந்த மரியன்னை இயேசுவின் அருகிலிருந்தார். அழகிய அவரது உருவத்தை இவ்வுலகில் நாம் காணுகின்ற எந்த படத்திலுமே காண முடியாது. உண்மையிலேயே எமது நிலையான இல்லம் விண்ணகமாகத்தான் இருக்க வேண்டும் என்பது எனக்குப் புரிந்தது. ஆயினும் இறைவனின் கட்டளைப்படி நான் மீண்டும் எனது காவல் தூதருடன் இவ்வுலகிற்கு வந்தேன். வைத்தியசாலையிலிருந்த எனது உயிரற்ற உடலைப் பரிசோதித்த வைத்தியர்கள் நான் இறந்து விட்டதாக அறிக்கை சமர்ப்பித்தார்கள். அதிகமாக இரத்தம் வெளியேறியமையே எனது மரணத்திற்கான காரணம் என எழுதினார்கள். இதனை எனது குடும்பத்தினருக்கு அறிவித்து எனது இறந்த உடலை வண்டியிலேற்றி சவஅறைக்கு கொண்டு செல்லும்போது மீண்டும் எனது ஆன்மா எனது உடலில் புகுந்தது. எனது பிளவுபட்ட, முறிந்த உடல் முழுவதிலும் வேதனையை உணர்ந்தேன். எனது எலும்புகள் முறிந்து, உடைந்து உடல் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. வேதனையினால் நான் உரத்து புலம்பினேன். அப்பொழுது எனது உடல் இருந்த வண்டியைத் தள்ளிக்கொண்டு சென்றவர்கள் அடித்தொண்டையால் கத்திக்கொண்டு சிதறி ஓடினார்கள். அவர்களில் ஒருவர் வைத்தியரிடம் சென்று "அந்த இறந்த உடல் முணுமுணுக்கிறது" என்றார். வைத்தியர் விரைந்து வந்து என்னைப் பரிசோதித்து 'குருவானவருக்கு உயிர் வந்துவிட்டது. இது ஒரு புதுமை. இவரை மீண்டும் வைத்திய சாலைக்குள் கொண்டு செல்லுங்கள்" என்றார். அங்கு எனக்கு இரத்தம் ஏற்றினார்கள். சத்திர சிகிச்சை அறைக்கு கொண்டு சென்று உடைந்து, நொறுங்கி இருந்த எலும்புகளை வைத்தியர் மீண்டும் ஒன்றிணைத்தார். எனது முறிந்திருந்த தாடை எலும்பு, விலா எலும்பு, முதுகெலும்பு, கைகள், வலது கால் ஆகியவற்றுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. இரண்டு மாதங்கள் சிகிச்சை பெற்றபின் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினேன். அப்போது வைத்தியர், எனக்கு 'இனிமேல் என்றுமே நடக்க முடியாது' என கூறினார்.

தொடரும்.....



# இயேசு சபைக்கு புதிய அருட்பணியாளர் தரங்க சஞ்ஜீவ சாமிநாதன் இயே.ச

திருகோணமலை மறைமாவட்ட தூயமரியாள் பேராலயப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் தரங்க சஞ்ஜீவ சாமிநாதன் எதிர்வரும் புரட்டாதித் திங்கள் 20ம் நாள் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையால் முதலாவது இயேசுசபைக் குருவாக திருப்பொழிவு செய்யப்பட இருக்கிறார்.

காலம்சென்ற பிரான்சிஸ் சாமிநாதன் திருமதி மல்லிகா சாமிநாதன் தம்பதியினருக்கு 07.11.1980ல் கடைக்குட்டியாகப் பிறந்தவர் தரங்க. இவருக்கு ஒரு சகோதரரும் ஒரு அருட்சகோதரியும் உள்ளனர்

புனித வளனார் தமிழ் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த இவர்ஆண்டு நான்கில் இருந்து உயர்தர வகுப்பு வரை தனது படிப்பை திருமலை புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்றார். அனைத்தும் இறைவனின் அதிஉன்னத மகிமைக்கே எனும் புனித இஞ்ஞாசியாரின் தாரக மந்திரத்தால் ஈர்க்கப்பட்டு இயேசு சபையில் தன்னை அர்ப்பணிக்க முடிவு செய்தார். 2000ம் ஆண்டில் இயேசு சபையில் இணைந்த இவர் 2001-2003 வரையிலான காலப்பகுதியில் களனியில் (Kelania) உள்ள இயேசுசபை நவ சந்நியாசத்தை முடித்துக் கொண்டு அதே இடத்தில் ஒருவருட காலமாக உளவியல் கற்கை நெறியில் பயிற்சி பெற்றார். 2004ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டுவரை இந்தியா கல்கதா நகரில் இயேசு சபையினரால் நடாத்தப்படும் புனித பிரான்சிஸ்கு சவேரியார் கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் இறை நிலைப் பட்டப்படிப்பை நிறைவு செய்தார். 2007 - 2009 வரையிலான காலப்பகுதியில் சென்னை இயேசுசபை மெய்யியல் கல்லூரியான தூய இதயக்கல்லூரி (சத்தியநிலையத்தில்) மெய்யியல்(M.A) முதுமானிப்பட்டம் பெற்றார். 2009 - 2011 வரையிலான காலப்பகுதியில் சோலக்கந்தை (நாவலப்பிட்டிய) தொழிநுட்பப் பயிற்சி நிலையத்திலும், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் இடைக்காலப் பயிற்சி (Regency) பெற்றார்.

இறையியல் கற்கை நெறிக்காக உரோமை நகருக்கு அனுப்பப்பட்ட அருட்சகோதரர் 2011ம் ஆண்டு தொடக்கம் 2014 வரையிலான காலப்பகுதியில் அகில உலகெங்கும் பிரசித்திபெற்ற கிரகோரியன் (University of Gregorian) பல்கலைக்கழகத்தில் தமது இறையியல் படிப்பை நிறைவு செய்து இயேசுசபையின் தலைமை ஆலயம் என அழைக்கப்படும் இயேசு (Jesu)ஆலயத்தில் திருத்தொண்டராக 23.04.2014ல் அபிஷேகம் செய்யப்பட்டார்.

புரட்டாதி திங்கள் 20ம் நாள் காலை 10.30 மணிக்கு திருமலை புனித மரியாள் பேராலயத்தில் திருநிலை திருச்சடங்கு இடம் பெறும் - திருநிலைப்படுத்தப்பட இருக்கும் அருட்சகோதரர் தரங்க சாமிநாதன் தனது முதல் திருப்பலியை 21.09.2014 காலை 06.45 மணிக்கு ஒப்புக் கொடுப்பார்

**அருட்சகோதரருக்காக செபிப்போம் அவரது குருத்துவப் பணிவாழ்வு சிறக்க வாழ்த்துவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தின் அழகு

அருட்பணி N.C அருள்வரதன்




- மனித நேயங்கள்
மனதிலே நிறைய வேண்டும்
மதங்கள் பலவாக இருந்தாலும்
மதங்கள் வேறாகலாம்
மொழிகளும் வேறாகலாம்
மனங்களோ என்றுமே
ஒன்றாக வேண்டுமே.

- எல்லா மதங்களும் உயர்ந்தவையே
உன்னத நிலைகளே
அவைகளும் சொல்லும்
சமயங்களால்
கற்றறிந்த வார்த்தைகளை
மறந்துவிடாமல்
கற்றபடியே வாழும்போது
உண்மையில்
மதங்களின் பெருமைகள்
நம்மால் வெளிவருமே
இதனால்
நாம் வணங்கும் தெய்வத்தால்
தொடர்ந்தும் நமக்கு
நன்மையே கிடைக்குமே
உண்மையே

- பிடிவாதம் ஆணவம்
அதர்மங்களின்
உருவாக்கமையங்கள்
மனங்களே

- பூட்டை உடைத்து
புறப்படும் விலங்குகளாய்
மனக்கூட்டை உடைத்துவரும்
விலங்குகளாலே
விளையும் விளைவுகள்
கொடுமைகளாகுமே
மனங்களின் இவைகள்
நிறைந்து விட்டால்
மற்றவரை மதிக்கும்
மனப்பாங்கு இல்லாது
மறைந்துகொள்ளுமே
இதனால் வன்முறைகள்
வார்த்தைகளாகவோ
செயல்வடிவாகவோ
வெடித்துவரும் போது
நீதிக்கு இடமின்றிப் போகுமே

- நம்மைப்போன்று
மற்றவரையும் மதிப்பதே
எந்தமதங்களும்
சொல்லித்தரும்
நல்ல பாடமாகும்
மறவாமல் இதன்படி வாழ்வதே
நம் மதங்களுக்கு
நாம் கொடுக்கும் சிறப்பாகும்

- அநீதியின் கொடுமைகள்
நம்மை ஆட்டிப்படைக்காவிட்டால்
மனித மாண்புகளை
நாம் மறந்தவர்களாவோம்
வேண்டவே வேண்டாம்
வேதனையூட்டும் நிலைகள்
மறைந்தவை போகட்டும

- அன்பும் தூய்மையும்
அகத்திலே நிறைய
முகத்திலே தோன்றும்
முறுவலின் பெறுமதி
மதிப்பிடமுடியா
மாணிக்கமாகுமே

# மரியன்னை மூலம் இயேசுவிடம் செல்வோம்



அருட்பணி சீ.ஜெயரெட்ணம்

**முன்னுரை:**

இந்த உலகின் ஒவ்வொரு பகுதியிலும் எங்கெல்லாம் கத்தோலிக்கர் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் மரியன்னை அரசியாகவும் அன்னையாகவும் அவர்களை வழிநடத்தி வருகின்றார். கத்தோலிக்கர் மட்டுமன்றி பிறமத சகோதரர்களும் அன்னையின் பரிந்துரையால் தம் வாழ்வை வளப்படுத்துகின்றனர்.



இந்த மகிமையும் மேன்மையும் ஒரு சில வருடங்களில் உருவான ஒரு வழக்கம் அல்ல.கடந்த 2000 ஆண்டுகளாக அன்பிலும் பக்தியிலும் உருவான ஒரு வரலாறு ஆகும். மரியன்னை நகரங்களின் பாதுகாவலியாக நாடுகளின் பாதுகாவலியாக ஊர்கள் ஆலயங்கள் பாடசாலைகள் நிறுவனங்களின் பாதுகாவலியாகவும் அருள் தருகின்றார். அகில உலகின் அன்னையான அவள் விண்ணக மண்ணக அரசியாக இருக்கின்றார்

எம் ஒவ்வொரு தேவைகளிலும் அன்னையின் அன்போடு எம்மைப் பராமரிக்கும் தேவதாயை நோக்கி நாம் எழுப்பும் செபங்களை அந்தத் தாய் ஒருபோதும் கைகழுவி விடுவதே இல்லை. எமக்காக இறைவனிடம் பரிந்து பேசி எம்முடைய நல்ல தேவைகளை நிறைவேற்றி வைக்கின்றார். இதன் முக்கியத்துவத்தினாலேயே இன்று உலகனைத்திலுமுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் பெரும்பான்மையானவை அன்னையின் பெயரில் அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன. இது அன்னையின் அன்புக்குச் சாட்சியாகும்.

**இன்றைய நிலை:**



இத்தகைய அன்னையின் பக்தி நாளுக்கு நாள் எம்மத்தியில் குறைந்து செல்வது இன்று கவலையுடன் நாம் காண்கின்ற ஒரு விடயமாகும். எம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் அரசியாக இருந்த அன்னை இன்று பாரம்பரியக் கத்தோலிக்கர் வாழ்கின்ற பகுதிகளில் கூட மறக்க வைக்கப்பட்ட ஒருவராக மாறி வருகின்றார். தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொழில் முயற்சிகள் போட்டி போடுகின்ற வாழ்க்கை முறை என்பன எம்மை அன்னையிடமிருந்து விலக்கி வைக்கின்றன. கல்வி பிரத்தியேக வகுப்புக்களுக்காக இன்றைய மாணவர்கள் செபத்தை மறக்கின்றனர். வழிகாட்ட வேண்டிய எம் பெற்றோர் செப வேளைகளிலும் தொ(ல்)லைக்காட்சியின் முன் தம் நேரத்தை விரயமாக்குகின்றனர்.

"கூடிச் செபிக்கும் குடும்பம் சிதறாது" எம் பாரம்பரியத்தில் நாம் கேட்கும் வார்த்தைகள் ஆகும்.ஆனால் குடும்பமாகக் கூடிவரும் சந்தர்ப்பங்களில் செபம் செய்வது இன்று எம் சமுதாயத்தில் அருகிவரும் வழக்கமாகி விட்டது.

எனவே எம் அன்றாட வாழ்வில் இவ்வாறு நாம் இழந்து கொண்டு செல்கின்ற அன்னையின் பக்தியை மீண்டும் எம்மத்தியில் எவ்வாறு வேர்விடச் செய்யலாம் என்பதை இந்தப் பகுதியிலேயே நாம் பார்ப்போம். இவை எம் ஆன்மீக வாழ்வை மீண்டும் அன்னையில் ஆழப்படுத்தி எம்மை வழிப்படுத்தும் கருவிகளாகும். தெடரும்.....

# மதமாற்றமில்லா சேவை



கல்கத்தாவில் மாசற்ற நெஞ்சின் மன்றத்தினால் அங்கிருந்த நோய்வாய்ப்பட்ட நிலையில் வந்து சேரும் மக்களுக்கு யாவரும் நினைக்கக்கூட இயலாத நிலையில் பாரிய உதவிகளை சேவைகளைப் புரிந்து கொண்டிருந்த அன்னை தெரேசாவும் அவர்களது சகோதரிகளும் அங்கு வரும் நோயாளர் மரணமாகுமுன்னர் மதமாற்றம் செய்கின்றனர் என்னும் தப்பான விளக்கத்தை காவல் துறையின் ஆணையாளரிடம்,அப்பகுதி பெரும் கூட்டத்தினர், மாணவர்கள் உட்பட கூறி முறையிட்டனர்.

காவல் துறை ஆணையாளரும் அவர்களிடம் தான் முதலில் அங்கு சென்று பார்வையிட வேண்டும் எனக்கூறி அங்கு சென்ற வேளையில் அன்னை தெரேசா அழுக்குப் படிந்து புழு நெளிந்து கொண்டிருந்த நோயாளியின் புண்ணைத் துப்புரவாக்கி புழுக்களை அகற்றித் துப்புரவாக்கினார். அப்புண்ணின் மணம் அப் பகுதியில் நிரம்பியிருந்தது. ஆணையாளரும் இதனை அவதானித்து எல்லா இடங்களையும் பார்வையிடுவதாக் கூறி அனைத்தையும் பார்வையிட்டு வாசலிலே நின்ற அம் மக்கள், மாணவரிடையே நீங்கள் உங்களது தாய், சகோதரிகளோ இவ்வில்லத்திற்கு வந்து இவர்கள் புரியும் சேவையினைப் புரிவதாக இருந்தால் நானே அனைவரையும் வெளியேற்றுவேன் எனக் கூறினார். அங்கு வந்தவர்கள் எதுவித கவனமும் இன்றி தாமாகவே வெளியேறினர். பிறரன்பைப் பற்றிக் கூறும் இயேசுவின் போதனையின் படி நடப்பவர்கள் சகலவித சேவைகளைப் புரிந்து வருகின்றனர். இதுபோன்ற சேவைகளில் ஒரு துளி கூட செய்ய இயலாதவர்கள் இச் சேவையினைக் கொச்சைப்படுத்த மதமாற்றம் செய்கிறார்கள் என விமர்சிப்பதே அவர்களால் இயலும், இப்படிப்பட்டவர்களுக்குக் காவல்துறை ஆணையாளர் கூறிய பதில் பொருத்தமானது. ஏன் இன்றைய காலத்திலும் கூட இப்படிக் கூறுபவர்களும் இருக்கிறார்கள்.

ச.அந்தோனிப்பிள்ளை
அ.இ. சமாதான நீதிவான்

# நான் கற்று உணர்ந்தவை

## அருள் அடையாளங்கள்

அன்று பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் பாரவோனின் அடிமை நிலையிலிருந்து செங்கடலை கடந்து கானான் நாட்டில் உரிமை வாழ்வை பெற்றதையும் நினைவு கூறி இன்று நாம் பாவம் என்னும் அடிமை நிலையிலிருந்து விடுதலை அடைந்து நிறைவாழ்வை நோக்கி பயணம் செய்ய அருளடையாளங்கள் தேவையே என்பதை வெளிக்கொண்டு வருகிறது. நம் உடல் வளர உணவு அவசியம் போன்று நம் ஆன்மா தூயதாய்வளர கிறிஸ்துவின் அருளடையாளங்கள் தேவையே பாவங்களால் இழந்த உறவை இவ் அருளடையாளங்களால் பெற்று புது வாழ்வு வாழ்வதற்கு துணை செய்கிறது. ஏனெனில் கிறிஸ்துவே அருளடையாளங்களின் மையமாக வாழ்கிறார். கிறிஸ்தவ வாழ்வில் அத்திவாரம் இடுவது திருமுழுக்கு என்னும் அருட்சாதனமே.

**இது கிறிஸ்தவ வாழ்வில்**

1. மனிதனைப் புனிதப்படுத்தவும்
2. கிறிஸ்துவின் மறையுடலை கட்டி எழுப்பவும்
3. இறைவனைப் புகழவும் இவை தலைசிறத்த தேவையாக அமைகிறது.

K.சுபா

# குட்டிக் கதை

Fr.N.C



ஒரு ஊரிலே இருவர் இருந்தனர். இருவருக்கு மிடையே பலத்த போட்டி ஒருவரைவிட ஒருவர் உயர்வாக இருக்கவேண்டும் என்னும் போட்டி. ஒருநாள் இருவரும் கடவுளிடம் வரம் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள் ஒருவ ஒருபுறம் மற்றவர் அவருக்கு எதிர்புறமா இருக்கின்றார்கள், இருவருக்குமிடையே ஓடிக்கொண்டிருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் கண்களை மூடிக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் முதலாவது ஆளுக்குத் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க அவர் "எனக்கு ஒரு கண் குருடாக வேண்டும் என்று கேட்க இறைவன் "தந்தேன்" எனக்கூற அவரது ஒருகண் பார்வை இழக்கிறது கடவுள் மறுகரைக்குச் சென்று மற்றர் முன் தோன்றி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்க அவர் சற்று யோசித்துவிட்டு அவனுக்கு கொடுத்ததுபோல் இரண்டுமடங்கு தாருங்கள் என்று கேட்க கடவுளும் "தந்தேன்" என்று கூறி மறைய இவருக்கு இரண்டு கண்களும் தெரியாமல் போய்விட்டது. இப்போது இரண்டும் கண்களையும் இழந்தவரை ஒற்றைக் கண்ணர் கைகளைப் பிடித்து வழிகாட்டிச் செல்கின்றார். போட்டிகள் வேண்டும் பொறாமைகள் வேண்டுமா?. சிந்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “தித்திக்கும் திருப்பாக்கள்”

அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட்

## திருப்பாடல் – 02

**திட்டமிடலாம் தீயோர்; முடிவு கட்டுபவரோ இறைவனே**

**1-3: வேற்றரசர் இஸ்ரயேல் அரசருக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தல்**

1வேற்றினத்தார் சீறி எழுவதேன்? மக்களினங்கள் வீணாகச்
சூழ்ச்சி செய்வதேன்? 2ஆண்டவர்க்கும் அவர்தம் அருள் பொழிவு
பெற்றவர்க்கும் எதிராகப் பூவுலகின் அரசர்கள் அணிவகுத்து
நிற்கின்றார்கள்; ஆள்வோர் ஒன்றுகூடிச் சதிசெய்கின்றார்கள்;
3“அவர்கள் பூட்டிய தளைகளைத் தகர்ப்போம்; அவர்கள் வைத்த
கண்ணிகளை நம்மிடமிருந்து அறுத்தெறிவோம்” என்கின்றார்கள்.

**4-5: இறைவன் அவர்களைக் கலங்கடித்தல்**

4விண்ணுலகில் வீற்றிருப்பவர் எள்ளி நகைக்கின்றார்; என்
தலைவர் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்கின்றார். 5அவர்
சினமுற்று அவர்களை மிரட்டுகின்றார்; கடுஞ்சினத்தால்
அவர்களைக் கலங்கடிக்கின்றார்

**6-9: இறைவன் தம் அரசரைத் திருநிலைப்படுத்தல்**

6“என் திருமலையாகிய சீயோனில் நானே என் அரசரைத்
திருநிலைப்படுத்தினேன். 7ஆண்டவர் ஆணையிட்டு உரைத்ததை
நான் அறிவிக்கின்றேன். நீர் என் மைந்தன்; இன்று நாம் உம்மைப்
பெற்றெடுத்தேன். 8நீர் விரும்புவதை என்னிடம் கேளும்; பிற
நாடுகளை உமக்கு உரிமைச் சொத்தாக்குவேன்; பூவுலகை
அதன் கடையெல்லைவரை உமக்கு உடைமையாக்குவேன்.
9இருப்புக் கோலால் நீர் அவர்களைத் தாக்குவீர்; குயவன்
கலத்தைப்போல அவர்களை நொறுக்குவீர்”.

**10-12: இறைவன் எதிரிகளைத் தம் அரசருக்கு அடிபணிய அழைத்தல்**

10ஆகவே, மன்னர்களே, விவேகமாக நடந்துகொள்ளுங்கள்;
பூவுலகை ஆள்வோரே, எச்சரிக்கையாயிருங்கள். 11அச்சத்தோடு
ஆண்டவரை வழிபடுங்கள்; நடுநடுங்குங்கள்! அவர் முன் அக
மகிழுங்கள்! 12அவர் சினங்கொள்ளாதபடியும் நீங்கள் வழியில்
அழியாதபடியும் அவரது காலடியை முத்தமிடுங்கள்;
இல்லையேல், அவரது சினம் விரைவில் பற்றியெரியும்; அவரிடம்
அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறுபெற்றோர்.

**பொருள் விளங்க...**

தனி மனிதருக்கு முன் அமைந்துள்ள இரு வழிகள் பற்றி முதல் திருப்பா குறிப்பிடுகின்றதென்றால், நாடுகளை அல்லது அரசுகளை எதிர்நோக்கியுள்ள இருவழிகள் பற்றி இரண்டாம் திருப்பா எடுத்துரைக்கின்றது எனலாம்.

யூத ராபிகள் இப்பாடலுக்குப் பல்வேறு பின்னணிகளைத் தருகின்றார்கள். பெலிஸ்தியர் தாவீதுக்கு எதிராகப் போரிட்டெழுந்த சூழலை, அல்லது அம்மோனியரும் சிரியரும் தாவீதை எதிர்த்து நின்ற சூழலை, அல்லது ஆகாசுக்கு எதிராக இரட்சின், பெக்கா ஆகிய இரு அரசரும் போர்தொடுத்த சூழலை அல்லது சாலமோனை மையமாக வைத்து இப்பாடல் எழுதப்பட்டிருக்கலாம் என்பர். எனினும் கிறிஸ்துவ வாசகர்களாகிய நமக்கு இது ஒரு குறிப்பிட்ட காலம், இடம், நபர், பின்னணி ஆகியவற்றைக் கடந்து, நம் எதிர்பார்ப்புக்ளின் நிறைவான உண்மை அரசர் கிறிஸ்துவையே சுட்டும். எனவே தான் இயேசுவின் திருமுழுக்கின்போதும், அவர் உருமாறிய வேளையிலும்,“நீரே என் மைந்தர்” என்ற சொற்கள் இயேசுவின் மேல் ஏற்றிக் கூறப்படுகின்றன. இப்பாடலின் முதற்பகுதி இயேசுவுக்கு எதிராகச் செயலாற்றிய பகைவர்கள் மீது ஏற்றிச் சொல்லப்படுகிறது. பவுல் அடியாரும் தந்தை கடவுள் தம் மகன் கிறிஸ்து இயேசுவை அரசராக்கியதை இப்பாடல் மேற்கோள் காட்டி விளக்குகிறார் (காண். தி.பணிகள் 13:33).

**செபித்து வாழ...**

மனிதரின் மனமாற்றம் இறைவனின் கொடை. அவரே தீய சக்தி அனைத்தையும் அடிமைப்படுத்தி வெற்றி காண்பவர். இம்மனமாற்றம் அடைய, அதன்வழி நம்மிலே இறையரசு மலர இறைவனிடமே வேண்டுவோம்.

மேலும் இறையரசுக்கு எதிராக எச்சக்தியும் தலைதூக்க இயலாது. வெளி உலகப் பகைவர்கள், ஆன்மீகத்திற்கடுத்த தீய சக்திகள் இதுகாறும் இறைவனை எதிர்த்து வென்றதும் கிடையாது, இனி வெல்லவும் இயலாது. இறுதி வெற்றி ஆண்டவரது “மெசியா”வான கிறிஸ்துவுக்கே. ஒன்றில் நாம் தாழ்ந்து பணிபுரியலாம்; அப்போது வெற்றி நமதே. அல்லது எதிர்த்துப் போரிடலாம்; அப்போது அழிவு நம்மைத் திண்ணமாய்ப் பின்தொடரும். எவ்வழி செல்வோம் நாம்? “எத்தனை நாள் இருமனத்தோராய்த் தத்தளித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஆண்டவர் தாம் கடவுள் என்றால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால்தான் கடவுள் என்றால் அவன் பின்னே செல்லுங்கள்” (அர.18:21) என்ற கூற்றை மனத்தில் இருத்திச் சிந்திக்க இப்பாடல் நம்மை அழைக்கிறது.

**நினைவில் நிறுத்த...**

**“நீர் என் மைந்தர், இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்” (7)**

**(நன்றி: ஆர். சே. இ[illegible])**

# குடும்பக் குவலயம்

## இன்றைய இளைஞர்களும் ஆன்மீகமும்.

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பதோ நவீன விஞ்ஞான யுகத்தில். மனித உயிர்களைஅழிக்க துணைபோகின்ற ஆயுதங்கள் குறைந்துசென்றாலும், மனிதனின் ஆன்மீகத்தை அழிக்கின்ற புதிய புதிய நவீனதொழில்நுட்பங்கள் உருவாகிக் கொண்டே உள்ளன. இவைகளில் இன்றைய இளைஞர்கள் போராடுபவர்களாகவே இருக்கின்றார்கள்.

ஆன்மீகத்தை உயிர்பெறச் செய்ய திருச்சபை பல வழிமுறைகளை கையாளுகின்றது. விசேடமாக இளைஞர்களை தனது ஆன்மீக கட்டுக்குள் விலக்கிட துடிக்கின்ற திருச்சபையின் விலங்குகளை அறுத்தெறிய துடிக்கின்றது இன்றைய இளைஞர் வட்டம்.

நவீன தொடர்பாடலின் உருவாக்கம் இளைஞர்களை தேவையற்ற பாதைக்குள் கொண்டு செல்கின்றது. இயந்திரத்துடன் நடமாடுகின்ற இளைஞர்கள் தாமும் ஓர் இயந்திரமாகிவிட்டனர். கைபேசி தொடக்கம் கணனிவரை இன்றைய இளைஞர் கூட்டம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

ஆனாலும் தடுமாற்றம் காண்கின்ற இளைஞர்களை தன்பக்கம் இழுக்க திருச்சபை மறக்கவில்லை. இயன்றவரைக்கும் இளைஞர்களை ஆன்மீகத்தில் உருவாக்க முழு முயற்சி செய்கின்றது. அதில் வெற்றியும் காண்கின்றது. அழிவு ஒருபக்கம் என்றாலும் ஆக்கமும் இருக்கின்றது என்பது உண்மை. இளைஞர்களும் தோற்பதாக இல்லை. கடன்திருநாள் தொடக்கம் ஆலயப் பெருவிழாவரையும் இளைஞர்கள் உற்சாகத்துடன் செயல்படுவதில் இருந்து இன்றைய இளைஞர்களில் ஆன்மீகத் தேடல் இருக்கின்றது என்பது உண்மை.

**திரு. திருமதி. செபஸ்தியான் பிறட்லி**
**உவர்மலை.**
**மறைமவாட்ட குடும்பவாழ்வு பணி.**

# குடும்பம் ஒரு குவலயம்



## குடும்ப தந்தையர்களின் ஆன்மீகம்

**எபே 6:4 “தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள் மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள்.”**

**சீராக் 42:9 “தந்தை தம் மகளுக்கும் தெரியாமல் அவளைப்பற்றி விழிப்பாய் இருக்கிறார். அவளைப்பற்றிய கவலை அவரது உறக்கத்தை விரட்டியடிக்கிறது.”**

ஆம் மேலே கூறப்பட்ட இரண்டு வார்த்தைகளையும்பற்றி நாம் என்ன நினைக்கின்றோம். அவை எங்களுக்கு என்ன சிந்தனையைத் தருகிறது. குடும்பங்களிலே எல்லாச் சுமைகளும் பெற்ற தாய்க்கு மட்டுமே என்று தான் பல தந்தையர்கள் முடிவெடுக்கிறார்கள். தாய்தான் பிள்ளை வளர்ப்பில் முழுபொறுப்பும் உடையவள் என்றும் நினைக்கிறார்கள் ஆனால் தந்தையர்களுக்கும் பல பொறுப்புக்களை ஆண்டவர் வைத்துள்ளார் என்பதை மறந்து விடுகிறார்கள்.

- ☆ நம்மில் எத்தனை தந்தைமார்கள் பிள்ளைகளை ஆண்டவருக்கேற்ற முறையில் அவருடைய வார்த்தைக்கு கீழ்படியத்தக்கதாக பிள்ளைகளை வளர்த்து வருகிறோம்.
- ☆ நம்மில் எத்தனை தந்தையர்கள் பிள்ளைகள் தவறுகள்விடும் போது கண்டித்து திருத்தி அறிவு புகட்டுகிறோம்.
- ☆ நம்மில் எத்தனை தந்தைமார்கள் பெண் பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்தி அக்கறை காட்டுகின்றோம்.
- ☆ நம்மில் எத்தனை தந்தைமார்கள் கிறீஸ்தவ விழுமியங்களை மதித்து அதன்படி வாழுகின்றோம்.
- ☆ நம்மையே சோதித்துப் பார்ப்போம் எமது பொறுப்புக்களை உணருவோம் குடும்பத்தில் ஒளி விளக்காய் இருப்போம் தந்தைக்குரிய மாண்பைப் பாதுகாப்போம் கடவுளுக்கும் ஒரு நாள் கணக்குக் கொடுப்போம்

**திருமதி சரோஜினி சிறில்பத்தினாதர்**
**உவர்மலை**

## ஆண்டு 9 – 11 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கான 2வது விழிப்புணர்வுப் பயிற்சிப் பாசறை (சிங்கப்பூர்)

ஆகஸ்ட் 5 - 9ம் திகதி வரை உப்புவெளி மேய்ப்புப்பணி நிலையத்தில் விழிப்புணர்வுப் பயிற்சிப் பாசறை நடைபெற்றது. இதற்கான ஒழுங்குகளை சிங்கப்பூரில் பணியாற்றும் அருட்பணி டெறன்ஸ் பெரேரா அவர்கள் மேற்கொண்டு அவருக்கு உதவியாக ஏழு பொதுநிலையினரோடு இணைந்து இப்பயிற்சிப் பாசறையை நடத்தினார்.

இம்மாணவர்கள் சாம்பல்தீவு, அலஸ்தோட்டம், உவர்மலை, குவாடலூப்பே, பேராலயம், இருதயபுரம் போன்ற பங்குகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். இப்பாசறை **“சக்கேயு இயேசுவை சந்தித்ததை”** வகுப்பறை முறைகளை மையமாகக் கொண்டிராமல், விளையாட்டு, பகிர்தல், மீளாய்வு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

மாணவர்களுக்கு தமது வாழ்க்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி எதிர்காலத்திற்கான நம்பிக்கையைக் கொடுப்பது இதன் நோக்கமாகும். இப்பாசறைக்கான ஒழுங்குகளை அருட்பணி c. நோயல் இம்மானுவேல் அவர்கள் மேற்கொண்டிருந்தார். இப்பாசறையை வழிநடத்திய அருட்பணி டெறன்ஸ் பெரேரா அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் எமது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேதாகமம் பிறந்த கதை

அருட்பணி போல்றொபின்சன்

இந்த முறைகளில் சில குறைகள் அல்லது சிறுசிறு பிழைகள் ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு. அது மாத்தரமல்ல இவ்வாறான முறைகளைக் கையாண்ட காரணத்தினால் பல தனிப்பட்ட கையேட்டுப் பிரதிகள் ஒன்றொடொன்று ஒத்திருக்கவில்லை, ஒரு பிரதியிலிருந்து இன்னுமொருபிரதிசிறிதளவிலான மாற்றத்தைக் கொண்டதாகவே இருந்தது.

ஆனாலும் இறைவார்த்தையில் அவர்களுக்கு இருந்த பக்தியும், ஆர்வமும், நம்பிக்கையும் அவர்களை இத்துணை பொறுமையோடும் கவனத்தோடும் பலமாதங்களை ஆண்டுகளை செலவிட்டு தங்களின் இறை அனுபவத்தை - இறைஆவியின் வழிநடத்தலில் இறை வார்த்தையாக - மனித வார்த்தைகளில் வடித்திருக்கின்றார்கள்.

ஆகவே எந்தெந்த சமூகங்களுக்காக அவற்றை எழுதினார்களோ அவைகள் (சிறு குறைகள் அல்லது மாற்றங்கள் இருப்பினும்) அந்த சமூகங்களுக்கு பரிசுத்த வேதாகமாகவும் - இறைவனின் உயிருள்ள வார்த்தையாகவும் செயல்பட்டது.

எழுதப்பட்ட பிரதிகள் சமூகங்களின் தேவைக்கேற்ப மீள்பிரதி செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்தன. இவ்வாறு மறைநூல் அறிஞர்களால் எழுதப்பட்ட பிரதிகளும் (Manu Scripts) அல்லது Autograph என்றும் அழைக்கப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் ஒன்றையொன்று மாறுபட்ட தன்மை கொண்டதாகவும் இருந்தது. சில வேளைகளில் சில பிரதிகள் மிகவும் தரமானதாகவும், சில பிரதிகள் அவைகள் பிரதி செய்யப்பட்டோரின் ஆற்றலுக்கும் விவேகத்திற்கும் ஏற்ப தரத்தில் குறைந்ததாகவும் காணப்பட்டன.

தயவு செய்து தப்பாய் புரிந்துவிட வேண்டாம்! எதை தரத்தில் குறைந்தது என வேதாகமத்தை சொல்லவில்லை மாறாக அவற்றை பிரதி செய்தோரின் ஆற்றல், அவர்கள் பாவித்த மொழி நடை, இலக்கிய பின்னணிபிரதி செய்ய பயன்படுத்திய எழுதுகோல் ("நீட்" எனும் மை தோய்த்து எழுதும் ஒரு வித பென் வகை அல்லது "குயில்" Quill எனும் பறவைகளின் சிறகு வகை) மேலும் எழுதுவதற்கு பயன்படுத்திய "பப்பிரஸ்" (Papyrus, "வெல்லும்" (Vellum) அல்லது தாள்கள் (Paper) இவைகள் கூட பிரதி செய்யப்பட்ட அல்லது மீள்பிரதி செய்யப்பட்ட வேதாகமத்தின் தன்மையையும் தரத்தையும் நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகித்திருந்தன.

இந்தக் கதை எழுதும் முயற்சி வெறும் துளி தான் துளி என்று விட்டுவிடாதீர்கள் இந்தத் துளிதான் சமூத்திரத்திற்கு கூட்டிக்கொண்டு போகும்!
வாசியுங்கள் ! தொடர்ந்து வாசியுங்கள்!

தொடரும்.........

**வாசகர்களே!**

**உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப்பார்க்கின்றோம். அவற்றை திருமலைத் தீபத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

**குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி :-**
**ஆசிரியர்**
**திருமலைத் தீபம்**
**297, டொக்கியாட் வீதி,**
**திருகோணமலை.**

# திருகோணமலை மறைமானிலச் செய்திகள்

## கந்தளாய் திரு இருதய நாதர் ஆலயப் பெருவிழா

யூலை 27ம் திகதி திருஇருதய நாதர் ஆலயப் பெருவிழா எமது மறைமாவட்ட ஆயர் அதி.வந் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத்திருவிழாத் திருப்பலியில் ஆயரினால் முதல்நன்மை, உறுதிப்பூசுதல் ஆகிய அருள் அடையாளங்கள் வழங்கப்பட்டது. இத்திருப்பலி தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் இடம் பெற்றது. பேராலயப் பங்குத்தந்தையின் ஒத்துழைப்புடன் பேராலயப் பாடகர் குழுவினர் இத் திருவிழா திருப்பலி சிறப்பாக அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.இத்திருப்பலிக்கு திருகோணமலை இயேசுசபை முதல்வர் அருட்பணி லக்ஷ்மன் பீரீஸ் அவர்களும் அருட்பணி எஸ். தேவதாசன் இ.ச அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் இத்திருவிழா சிறப்புற அமைய அயராது பாடுபட்டவர் பங்குத்தந்தை அருட்பணி கபிரியேல் அல்பிரட் இ.சஅவர்கள் ஆவார்.

## தூய மரியாள் பேராலய 121வது வருடாந்த திருவிழா

கடந்த 06.08.2014 முதல் 15.08.2014 வரை தூயமரியாள் பேராலயத்தில் 121வது வருடாந்த திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இத் திருவிழாவின் மறையுரையின் மையப் பொருளாக "மனிதனில் உள்ள இறைசாயலே மனித மாண்பின் அடித்தளம்" 2014ம் ஆண்டிற்கான ஆயரின் சுற்றுமடலில் இருந்து நற்சிந்தனைகள் பல அருட்பணியாளர்களினால் வழங்கப்பட்டன. மேலும் திருவிழா திருப்பலியை எமது மறைமாவட்ட ஆயர் அதி.வந்.யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் திருவிழா திருப்பலிக்கு ஏனைய பங்குகளிலுள்ள பங்குத் தந்தையர்களும் இறைமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

## பாலையூற்று அன்புவழிபுரம் தூய சதாசகாய அன்னை ஆலய 23வது வருடாந்த திருவிழா

அன்புவழிபுரத்தில் சதாசகாயம் புரிந்து வரும் அன்னையின் ஆலயத் திருவிழா 08.08.2014 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாட் காலங்களில் பல்வேறு கருப்பொருளில் வெவ்வேறு அருட்பணியாளர்களினால் ஆழம்மிக்க மறையுரைகளும் திருப்பலியும் ஒப்பு கொடுக்கப்பட்டது. 16.08.2014 காலை 06.45 மணிக்கு மறைமானில ஆயரின் தலைமையில் முதல்நன்மை, உறுதிப்பூசுதல் ஆகிய அருள் அடையாளங்கள் வழங்கப்பட்டது. 23வது ஆலய வரலாற்றில் இவ்வருடமே உறுதிப்பூசுதல் அருளடையாளம் முதல் முறையாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மாலை நற்கருணை வழிபாடும் ஆராதனையும் அன்னையின் திருச்சொருப பவனியும் இடம்பெற்றது. 17.08.2014 அருட்பணி போல்ரொபின்சன் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது. அன்னையின் ஆசீரும் வழங்கப்பட்டு கொடி இறக்கப்பட்டு திருவிழா நிறைவேறியது. இதன் நிறைவில் 18.08.2014 குருத்துவ நினைவு நாளை கொண்டாடும் அருட்பணி அருட்பணி போல்ரொபின்சன் அவர்களுக்கு கேக் வெட்டி கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. பி.ப 03.00 மணிக்கு ஆலய வளாகத்தில் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றது.

**திருமதி சிந்துஜா லெப்பன்,**
**அன்புவழிபுரம்**


## சிங்களமொழி இளைஞர்,யுவதிகள் மறையாசிரியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு

25.08.2014 அன்று காலை 08.00மணி முதல் பிற்கல் 05.00 மணிவரை புடவைக்கட்டு தூய செபஸ்தியார் ஆலயத்தில் புல்மோட்டை திரியாய், புடவைக்கட்டு, கல்லறாவை ஆலயங்களைச் சேர்ந்த மறையாசிரியர்கள், இளைஞர், யுவதிகளுக்கான ஒருநாள் செயலமர்வு நடைபெற்றது. இதற்கு 12 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். மேலும் விவிலியம், அடிப்படை வாழ்க்கை அனுபவங்கள் விளையாட்டுக்கள் மூலம் இச்செயலமர்வு அருட்பணி சீ.ஜெயரெட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதனை நெறிப்படுத்தியவர் செல்வி செரின்

## புடவைகட்டு தூய செபஸ்தியார் ஆலயத் திருவிழா

23, 24. 08. 2014 ஆகிய தினங்களில் புடவைக்கட்டு தூய செபஸ்தியார் ஆலய நவநாளும் திருவிழாவும் இடம் பெற்றது. திருவிழா திருப்பலி ஆயரின் பிரதிநிதி அருட்பணி C. நோயல் இம்மானுவேல் அவர்களின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதனை அருட்பணி சீ.ஜெயரெட்ணம் ஒழுங்கு செய்திருந்தார்.

## மறைமாவட்ட விவிலிய கட்டுரைப் போட்டி முடிவுகள் - 2014




### தரம் 4,5,6

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | செல்வன் | சா.ஷெஹான் | பேராலயப் பங்கு |
| 2ம் இடம் | செல்வி | செந்தில்நாதன் தர்ஷிக்கா | மூதூர்ப் பங்கு |
| 3ம் இடம் | செல்வி | பிஜான்சி தேவகாந்தன் | உவர்மலைப்பங்கு |

### தரம் 7,8,9

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | செல்வி | பிரினா வின்சன் பெரேரா | பாலையூற்றுப் பங்கு |
| 2ம் இடம் | செல்வன் | நோ. டிலுக்ஷன் | குவாடலூப்பே பங்கு |
| 3ம் இடம் | செல்வி | வனுஷாலினி தேவகாந்தன் | உவர்மலைப்பங்கு |



### தரம் 10,11,12

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | செல்வி | அன்ரனி சாம்சன் ஜிலக்ஷினி | பாலையூற்றுப் பங்கு |
| 2ம் இடம் | செல்வி | வி. டிலுஸ்ஸிகா | தம்பலகாமம் பங்கு |
| 3ம் இடம் | செல்வி | யோகராஜா தர்ஷிக்கா | மூதூர்ப் பங்கு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் செய்திகள்

## திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரைகளிலிருந்து



- இக்காலத்தில் இடம்பெறும் கிறிஸ்தவர்க்கெதிரான அடக்குமுறைகள், திருஅவையின் முதல் நூற்றாண்டுகளில் நடந்ததை விட அதிகக் கொடூரமாய் இருக்கின்றன. அந்தச் சகாப்தத்தை விட இக்காலத்தில் அதிகமான கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாக உயிரிழக்கிறார்கள்.
- இயேசுவின் வார்த்தை இறையரசாக வளர்ந்து செழிக்க தூயஆவியின் பலமும் கிறிஸ்தவர்களின் சாட்சியமுமே முக்கிய கூறுகளாக இருந்துள்ளன.
- வாழ்வில் இன்னல்களை சந்திக்கும் போது, நம் நம்பிக்கைக்கு மகிழ்வுடன் சாட்சி பகருவதற்கு தேவையான சக்தியை நாம் இறைவனிடம் கேட்போம்.
- நம்மைத் தம் கரங்களில் தாங்கியிருக்கும் கனிவான தந்தை போன்றவர் இறைவன். அவரோடு உரையாடல் நடத்துவதற்கு நாம் சிறு குழந்தைகள் போல் மாற வேண்டும்
- கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் வழியைத் தயார் செய்ய வேண்டும் உண்மையை தெளிவாக உய்த்துணர வேண்டும். **நம் இதயத்திலும், பிறரின் ஆன்மாக்களிலும் இறைவன் வளரும்படியாக நம்மை நாம் தாழ்த்த வேண்டும்.**
- கிறிஸ்தவர்களிடையே நிலவும் பிரிவுகள் உலகில் பெரும் எதிர்சாட்சியாக உள்ளன.
- நினைவுகளைத் தாங்கி வாழும் முதியோரையும், சக்தியுடன் செயலாற்றத் துடிக்கும் இளையோரையும் ஓரங்களில் தள்ளிவிடும் எந்த ஒரு சமுதாயமும் நலனுடன் வாழ இயலாது
- **இறைவழிபாடு பணவழிபாட்டால் ஈடுகட்டப்படும் போது பாவத்தின் பாதை ஒருவரின் சொந்த ஆதாயங்களுக்கு வழி திறக்கிறது.** ஒருவர் இறைவனை வழிபடாமல்இருக்கும் போது வஞ்சக செயல்களிலும் வன்முறைகளிலும் வாழும் மனிதரைப் போன்று தீமையை வழிபடுகிறவராக மாறுகிறார்.
- பிறர் உடைமையை அநியாயமாய்ப் பறித்துக் கொள்பவர் இறுதியில் அவரே இழப்பவராக இருப்பார். ஏனெனில் அவரிடம் குறைபடும் கருணைக்கு அவரே பலியாகிவிடுவர்.
- தீர்ப்பிடுகிறவர் தவறு செய்கிறார். குழம்பிப்போய் இருக்கிறார். தோல்வியடைந்தவராக மாறுகிறார். ஏனெனில் ஒரே நீதிபதியாக இருக்கும் இறைவனின் இடத்தை அவர் எடுத்துக்கொள்கிறார்.
- வயிற்றுப் பசியோடு மனிதருக்கு மற்றுமொருபசி இருக்கிறது. அது வாழ்வதற்கான பசி, அன்புக்கான பசி, பேரின்ப வாழ்வுக்கான பசி, இந்தபசியை, சாதாரண உணவினால் போக்கமுடியாது. இறைவனின் உணவே உண்மையிலே திருப்திபடுத்த வல்லது.
- கத்தோலிக்க நம்பிக்கையை வாழ்வதென்பது உலகப் பொருள்களின் மீது வாழ்வை கட்டியெழுப்பாமல், அழியாத உணவாகிய இயேசுவால் ஊட்டமளிக்கப்படுவதற்கு உங்களைக் கையளிப்பதாகும்.
- இவ்வுலகில் சிலர் பணத்தாலும், இன்னும் சிலர் வெற்றி மற்றும் வீண் தற்பெருமையாலும், மேலும் சிலர் அதிகாரம் மற்றும் செருக்கினாலும் தங்களுக்கு ஊட்டமளிக்கின்றனர். இவை திருப்தியை அதிகமாக அளிப்பதுபோல் தோன்றலாம். ஆனால் இவை அடிமையின் மேஜையில் உண்ணப்பட்டவை
- இவ்வுலக மதிப்பு, அதிகாரம் பணம் ஆகியவற்றின் கவர்ச்சி இதயத்தைக் கடினப்படுத்தும். அது உண்மையான மகிழ்வை கொண்டு வராது. மாறாக, நாம் அடுத்திருப்பவர் மீது நாம் காட்டும் அன்பும் இறைவழிபாடுமே நம் இதயங்களை மகிழ்ச்சிப்படுத்தும் உண்மையான சொத்துக்கள்.
- ஊழல்வாதிகள் கடவுளை எரிச்சலடையச் செல்கின்றனர் மற்றும் கடவுளின் மக்களை புண்படுத்துகின்றனர்.
- ஊழல் அரசியல்வாதிகள், ஊழல் தொழிலதிபர்கள், ஊழல் திருஅவை நபர்கள் ஆகிய மூவருமே அப்பாவிகளையும் ஏழைகளையும் புண்படுத்துகின்றனர். தங்கள் ஊழல்களில் ஒருபகுதியை ஏழைகள் செலுத்துமாறு செய்கின்றனர். இவர்கள் மீது பேரிடரை வரச்செய்வேன் என இயேசு தெளிவாக சொல்கிறார்.
- நீதியின் தீர்ப்பில் தெளிவு இருக்க வேண்டும். அது சொந்தக் கருத்துக்களிலிருந்து விலகியதாகவும், அதே நேரம் மனிதப் பக்குவத்தை வெளிப்படுத்துவதாகவும், உண்மையான நிலைகளோடு ஒத்துப்போவதாகவும் அமைய வேண்டும்.
- வெறுப்புகொண்ட கிறிஸ்தவர் என்பது ஒன்றொடொன்று பொருந்தாத இரு வார்த்தைகள். கிறிஸ்தவர் என்ற வார்த்தையே அன்புசெய்பவர் என்ற பொருள் கொண்டது.
- அரசியல் தளமாக இருந்தாலும் சரி, திருஅவைத் தளமாக இருந்தாலும் சரி, ஆட்சி அதிகாரம் என்ற சக்திகளைச் சரிவரப் பயன்படுத்தாவிடில் அங்கு ஊழலும் தீமையும் பெருகும்.
- நம்மைப் பாதிக்காத துன்பத்தை மறக்கும் ஆபத்தை எதிர்கொள்கிறோம். நாம் பிறரின் துன்பத்தை துடைக்க முன்வருவோம்
- நற்செய்தி அறிவிப்பதில் கிடைக்கும் மகிழ்வினை இழக்காதிருக்க நம்மை கையளிக்காதிருப்போம்
- நம் போதகராகிய கிறிஸ்துவின் வாழ்வைப் பின்பற்றி நாம் சந்திக்கும் மக்களின் வாழ்வோடு நம்மைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களுக்கு மிக நெருக்கமாக இருக்கவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.
- ஏழ்மை, மனிதத் துன்பங்கள் பற்றி நாம் ஏராளமான தகவல்களையும், புள்ளி விபரங்களையும் கொண்டிருக்கிறோம். இவற்றின் உண்மையான பிரச்சனைகளை நோக்காமல், வெறும் இனிய உரைகளால் இவற்றுக்குத் தீர்வு கூறும் ஆபத்தும் இருக்கின்றது.
- தூயஆவி நம் வாழ்வில் செயல்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அவரை நம் வாழ்வில் அனுமதிப்போம் இதனால் அவர் நம்மையும், திரு அவையையும், உலகையும் புதுப்பிப்பார்.
- நம் ஆண்டவர் நம்மிடம் ஒரு பணியைக் கொடுக்கும் போது அதற்காக நம்மை நன்கு தயாரிக்கிறார். நாம் அதற்கு செபம் மற்றும் அன்புறுதியுடன் பதிலளிக்க வேண்டும்.
- வாழ்வுக்கும், அன்பு செய்வதற்கும், பிறர்மீது அக்கறை காட்டுவதற்கும், கல்வி வாய்ப்புக்கும், வேலைவாய்ப்புகளை பெருமளவாக வழங்குவதற்கும் இசைவு தெரிவிக்கும் போது
- சட்டத்திற்கு புறம்பேபோதைப்பொருள் வணிகம் இடம்பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. **சிலநேரங்களில் நாம் வயதானவர்களை ஒதுக்கி வைக்கிறோம். ஆனால் அவர்கள் விலைமதிப்பில்லாத சொத்து; அவர்களை ஒதுக்கி வைப்பது அநீதியானது மற்றும் சரிசெய்ய இயலாத இயல்பாகும்.**
- உலக பொருளாதார அமைப்பு, உலகில் வல்லமை மிக்க நாடுகளை உயர்த்திக் காட்டும் விதமாக இராணுவத் தாக்குதல்களை வலுக்கட்டாயமாக ஊக்குவிக்கின்றது.
- சிலைவழிபாட்டுப் பாவமாக இருக்கின்ற பணம், உலகப் பொருளாதார அமைப்பின் மையமாக அமைந்துள்ளது. பொருளாதார சிலைவழிபாடுகளின் வரவு செலவைச் சரி செய்வதற்கு, பொருளாதார அமைப்புகள் ஆயுதங்களை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்கின்றன.

# அகில இலங்கை வேதாகம வினாவிடைப் போட்டியில் தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிக்கு தெரிவானோர் - 2014

## தமிழ்ப் பிரிவு



**தரம் 6,7,8,9**

1ம் இடம் பாலையூற்றுப் பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்
2ம் இடம் குவாடலூப்பே (பள்ளத்தோட்டம்) பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்
3ம் இடம் சாம்பல் தீவுப் பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்



**தரம் 10,11**

1ம் இடம் பாலையூற்றுப் பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்
2ம் இடம் தி/கலைமகள் மகா வித்தியாலய போட்டியாளர்கள் பெறுகிறார்கள்
3ம் இடம் சாம்பல் தீவுப் பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்

**தரம் 12,13**

1ம் இடம் குவாடலூப்பே (செல்வநாயகபுரம்) பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்
2ம் இடம் பாலையூற்றுப் பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்
3ம் இடம் பேராலயப் பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்



## சிங்களப் பிரிவு

**தரம் 6,7,8,9**

1ம் இடம் சீனன்குடா (ஆண்டாங்குளம்) பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்
2ம் இடம் சீனன்குடா பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்

**தரம் 10,11**

1ம் இடம் சீனன்குடா பங்கு போட்டியாளர்கள் பெறுகிறார்கள்



## ஆங்கிலப் பிரிவு

**தரம் 6,7,8,9**

1ம் இடம் தி/சென்மேரிஸ் கல்லூரி போட்டியாளர்கள் பெறுகிறார்கள்

**தரம் 10,11**

1ம் இடம் தி/சென்மேரிஸ் கல்லூரி போட்டியாளர்கள் பெறுகிறார்கள்

## ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள்

இயேசு சபை உயர்கல்விச் சாலையில் மாணவர்களுக்கு நடாத்தப்படும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன விரும்பியவர்கள் கலந்து கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-

**Aniston Morais SJ**
**Jesuit Pre Novitiate**
**240 Inner Harbour Road**
**Trincomalee - Sri Lanka**

**Mobile No 0094 773605554**
**Home No 0094 262226247**
**Office No 0094 262224100**
**Skype anistonsj**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேளாங்கண்ணித் திருத்தல ஆரோக்கிய அன்னை பெருவிழா புரட்டாதித் திங்கள் 8ம் நாள்

அருட்பணி ஆஞ்சலோ பொன்னையா இ.ச

மரியன்னை மக்கள் வாழ்வில் கொண்டுள்ள தாக்கத்தைத் துல்லியமாக உணரச் செய்யும் இடங்கள் அவரது திருத்தலங்கள் ஆகும். தமிழகத்தில் கத்தோலிக்கக் கோவில்களை "மாதா கோவில்" என்றே பலர் அடையாளம் காட்டும் நிலை பல நூற்றாண்டுகளாகவே இருந்து வருகின்றது. கத்தோலிக்க ஆலயங்களில் அன்னை மரியாளுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஆலயங்களே ஏராளம். அவற்றில் அன்னையின் திருத்தலங்கள் மக்களை அன்றாடம் ஆயிரக்கணக்கில் ஈர்ப்பதைக் காண்கிறோம். அன்னையின் திருத்தலங்களை மூன்றுவகையாகப் பிரிக்கலாம்.

1. **அன்னையின் திருவுருவம் போற்றும் திருத்தலங்கள்**
2. **அன்னையின் காட்சித் திருத்தலங்கள்**
3. **காட்சி நினைவுத் திருத்தலங்கள்**

திருவிவிலியம், கிறிஸ்தவ மரபு இவற்றை விட மக்கள் மத்தியில் மரியாளை இனங்காட்டி எளிய முறையில் அவள் பக்தியை அதிகம் உருவாக்கியிருப்பது அவளுடைய காட்சிகள். 19ம், 20ம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த காட்சிகள் அதிகமாக மக்கள் மனதில் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை பிரான்சு நாட்டில் சலேத் என்னும் சிற்றூரில் 1846ம் வருடம் புரட்டாதித் திங்கள் 19ம் நாள் மாக்சியன் ஜீரோ (11வயது), மெலான் மத்தியு (14வயது) ஆகிய சிறுவர்களுக்கு மரியன்னை அளித்த காட்சி 1858ம் வருடம் மாசித் திங்கள் 11ம் நாள் தொடக்கம் ஆடித்திங்கள் 16ம் நாள் வரை 18 முறை பேர்னடெத் என்ற சிறுமிக்கும் அவரோடு இரு சிறுவருக்கும் அன்னை அருளிய காட்சிகள். 1917ம் வருடம் வைகாசித் திங்கள் 13ம் நாள் தொடக்கம் ஐப்பசித் திங்கள் 13ம் நாள் வரை ஒவ்வொரு மாதமும் (ஆவணித் திங்கள் நீங்கலாக) லூசியா, பிரான்சிஸ், ஜெசிந்தா என்னும் இடையர்குல சிறுவர்களுக்கும் போர்த்துக்கல் நாட்டிலுள்ள பத்திமா என்னும் கிராமத்தில் அளித்த காட்சிகள்.

இதை விட 1531ல் மெக்சிக்கோவில் உள்ள குவாது லுப்பே என்னும் இடத்தில் ஜுவன் தியாகோ (Juan Diego) என்பவருக்கு கனவில் தோன்றி தனது பெயரால் ஆலயம் ஒன்று அமைக்கப்பணித்தமை. இந்தியாவில் அன்னையின் காட்சித் திருத்தலம் வேளாங்கண்ணி. இது ஏனைய திருத்தலங்களை விட காலத்தால் பழமையானதும், பிறசமயத்தவரை அதிகம் ஈர்க்கின்ற புனிதத் தலமாகவும் சிறந்து விளங்குகின்றது. ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன் வேளாங்கண்ணிக் காட்சிகள் நடந்ததாகக் கூறப்படுகின்றன. மூன்றுகாட்சிகள் இத்திருத்தலத்தோடு முக்கிய தொடர்புடையவை,

1. **பால்க்காரச் சிறுவனுக்கு கன்னிமரியாள் காட்சியளித்தது.**
2. **மோர் விற்று வாழ்க்கை நடத்திய ஓர் விதவையின் முடமான மகனைக் குணப்படுத்திஅவள் மூலமாக நாக பட்டினத்தில் உள்ள ஒருவரிடம் சென்று அவருக்கு ஓர் ஆலயம் அமைக்கும் படி விடுத்த வேண்டுகோள்.**
3. **கடலில் தத்தளித்த போர்த்துக்கேயக் கப்பலையும், மாலுமிகளையும் பேராபத்தில் இருந்து காப்பாற்றிய புதுமை. அவர்கள் தாம் செய்த நேர்த்திக்கு அமைவாக குடிசையால் வேயப்பட்டிருந்த ஆலயத்தை செங்கற்களால் கட்டி நன்றிக் கடன் செலுத்திய நிகழ்வு.**

மார்கழித் திங்கள் என்றால் தென் தமிழகம் எங்கும் ஐயப்ப பக்தி காணப்படும். எங்கு பார்த்தாலும் "ஐயப்பா சரணம்" பாடல்கள் ஒலிக்கும், எங்கு நோக்கினும் ஐயப்ப பக்தர்கள் வெறும் காலோடும், வெற்று உடம்போடும் சபரிமலையை நோக்கிப் படையெடுப்பர். பாதயாத்திரை மேற்கொண்டிருப்பர். ஏறத்தாழ இதேபோன்ற திருவிழாக் கோலத்தை புரட்டாதித் திங்களைச் சந்திக்கின்றது. நாக பட்டினத்திலுள்ள வேளாங்கண்ணியை நோக்கிய மக்கள் கூட்டம். இந்தியத் திருநாட்டில் இருந்து மட்டுமல்ல உலகின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையாக வேளாங்கண்ணியை நோக்கிய திருப்பயணம். ஆவணித் திங்கள் 29ம் நாள் தொடங்கி புரட்டாதித் திங்கள் 8ம் நாள் வரை வேளாங்கண்ணியில் இலட்சக் கணக்கான மக்கள் வெள்ளம். தொடர்ச்சியாக நடைபெறும் திருப்பலிகள். .திருத்தல ஆலய வாசலில் இருந்து அன்னையின் தரிசனத்திற்காக மணிக்கனக்காகக் காத்திருக்கும் பக்தர்கள் கூட்டம்.

தொடரும்

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி 01
## தூய மத்தேயு நற்செய்தி 1-5

**அன்பார்ந்த வாசகர்களே**

"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும். 1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு150/=, அனுப்ப வேண்டிய முகவரி விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 01. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30.09.2014**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | | ம | | | வி | | | | |
| | தீ | | | வி | | | | | |
| | | எ | | ஆ | | | | | ம |
| | | | | | ம | | | | |
| | | | | | | | | வே | மா |
| | | | ந | | ஆ | | | | |
| | | மே | | வ | | | | வி | |
| | | | | | நெ | | | | |
| | வெ | | த | | | | | பே | |
| | கோ | | | | | | | | தூ |

தூ___ /ஆ___யால் /க___வு__றி__ந்__ர் / விண்___ல__ன் /மே___ம் /ஆ___யிட/ வேண்___ம்/ம___ம் /மா___ங்___ள்/விண்___ரசு நெ__ங்___ /வ___து /வி___டது /ந__க___/ த__த/ ம__ங__ள்/எல்__ம்/வெ__ட__ப__டு தீ__ல் /ம__ழ்__து /பே__வ__/ கொள்__ங__ள்.

பெயர் ..........................................

முகவரி ..........................................

பங்கு ..........................................



## மறைக்கல்வி கற்போம்

01. விவிலியம் என்றால் என்ன ?
**கிறிஸ்தவர்களின் புனித புத்தகம்**

02. திரு விவிலியம் என்பதன் பொருள்
**"பிப்லியா" என்னும் கிரேக்க வார்த்தை யிலிருந்து வருகிறது இதற்கு புத்தகங்கள்** என்று பொருள்

03. திரு விவிலியத்தின் மொத்த நூல்கள்
**73நூல்கள்**

04. காகிதமே இல்லாத காலத்தில் விவிலியம் எதனால் எழுதப்பட்டது? **பாப்பிரஸ்**

05. திரு விவிலியத்தின் பிரிவுகள்?
**பழைய ஏற்பாடு 46, புதிய ஏற்பாடு 27**

06. பழைய ஏற்பாடு முதல் முதலில் எழுதப்பட்ட மொழி? **எபிரேயம்**

07. திரு விவிலியத்தின் மையக் கருத்து?
**மனுகுலத்தின் மீட்பு**

08. திருவிவிலியத்தை எழுத பயன்படுத்தப்பட்ட மொழிகள்? **அராபிக்,எபிரேயம், கிரேக்கம்**

09. திரு விவிலிய புத்தகங்களை அதிகாரமாக பிரித்தவர்? **ஸ்டிபன் லாங்டன் 1204ல்**

10. திரு விவிலிய வசனங்களை எண்ணிக்கையிட்டவர்?
**இராபர்ட் ரு ஸ்டிபன் 1548ல்**

11. திரு விவிலியம் எப்போது எழுதப்பட்டது?
**கி.மு 1500க்கும் கி.பி100க்கும் இடையில்**

12. திரு விவிலியத்தின் முதல் வசனம்?
**தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார்**

13. திரு விவிலியத்தின் இறுதி வசனம்?
**ஆண்டவராகிய இயேசுவின் அருள் அனைவரோடும் இருப்பதாக**

14. திரு விவிலியத்தின் இறுதி நூல்?
**திருவெளிப்பாடு**

15. திரு விவிலியத்தை தமிழில் முதல் முதலில் மொழிபெயர்த்தவர்? **வீரமாமுனிவர்**



## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்ப்போட்டி -08
## விடுதலைப் பயணநூல் அதிகாரம் 31-40 வரை

*இப் படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும்*

01. முதல் மாதத்தில் முதல் நாள் சந்திப்புக் கூடாரத்தின் திரு உறைவிடத்தை நீ எழுப்புவாய். யார் யாரிடம் கூறியது? விடை :–..........................
02. ஊரின் தந்தையின் பெயர்? விடை:–..........................
03. ஆண்டவருக்கு புனிதமான நாள் எது?
விடை:–..........................
04. எதனால் மோசேயின் முகத்தோற்றம் ஒளிமயமாய் இருந்தது? விடை:–..........................
05. ஆண்டவரைத் தேடுவோர் யாவரும்அங்கு செல்வர்?
விடை:–..........................
06. ஆண்டவருக்கு அர்ப்பணம் என்று எதன் மேல் முத்திரை போல் பொறித்து வைத்தனர்?
விடை:–..........................
07. சித்திம் மரத்தில் பேழை செய்தவர் யார்?
விடை:–..........................
08. நீ அந்நாட்டில் வாழ்வாரோடு.......................... செய்யாதே?
09. சந்திப்புக் கூடாரத்தில் திருத்தூயகம் முன்னே மோசே எதை வைத்தார்? விடை:–..........................
10. கூடவரவில்லையெனில் எங்களை இங்கிருந்து போகச் செய்யாதிர? விடை:–..........................
11. இஸ்ராயேல் மக்கள் ஆண்டவருக்குக் காணிக்கை கொண்டு வந்தனர்? விடை:–..........................
12. நான் உன்னை.......................... நிறுத்தி வைப்பேன்.
13. மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிச் செல்கையில் எதனை தம் கைகளில் தாங்கிக் கொண்டிருந்தார்?
விடை:–..........................
14. "இங்கிருந்து இறங்கிப் போ நீ எகிப்திலிருந்து நடத்தி வந்த உம் மக்கள் தங்களுக்குக் கேடு வருவித்துக் கொண்டனர்" அதிகாரம் வசனம் என்ன?
விடை:–..........................
15. தூயகத்தின் அனைத்துப் பணிக்கும் பயன்படுத்தப்பட்ட தங்கமெல்லாம் எதன் மூலம் வந்தது?
விடை:–..........................

பெயர் ..........................................

முகவரி ..........................................

பங்கு ..........................................

அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30.09.2014

## திருவிவிலிய புதிர்ப்போட்டி – 6 இன் விடைகள்




01. 430 ஆண்டுகள் (12:40)
02. இராம் சேசிலிருந்து –சுக்கோத்துக்கு (12:37)
03. ஆண்டவரின் விழாவாக (12:14)
04. ஏலீம் – சீனாய் (16:01)
05. ஒரேபு (17:6)
06. 3மாதம் முதல் நாள் (19:1)
07. யாவே நீசி (17:5)
08. ஆபீப் மாதத்தில் (13:4)
09. யோசேப் (13:19)
10. கானான் (16:35)
11. மன்னா (16:30)
12. எகிப்து நாட்டினின்று அவர்களை வெளியேறச் செய்த இரவு (12:42)
13. மிரியாம் (15:20)
14. ஓய்வு (16:23)
15. 20ம் அதிகாரம்

பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.

பங்குபற்றியவர்கள் – 30 பேர்

சரியான விடையளித்தோர் – 20 பேர்



### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/=
செல்வன் யோ.அருஷன்
இல:101, அன்புவழிபுரம்
திருகோணமலை

2ம் பரிசு 300/=
செல்வி அ. கரோலின் கிரத்திக்கா
இல: 57, தபால் நிலைய வீதி
திருகோணமலை

3ம் பரிசு 150/=
செல்வன் அ.அருள்ராஜ்
3ம் வட்டாரம்
நிலாவெளி
திருகோணமலை

### பாராட்டுக்குரியவர்கள்

- செல்வன் போ. கிஷேர் பிரவின் இல: 24/5k கோணேச புரம் உவர்மலை.
- செல்வன் ஏ. கலக்ஷன் இல: 11/11செல்யூட்ஸ் லேன் பாலையூற்று
- செல்வி ம. விஜுஷ இல: 24/5k கோணேச புரம் உவர்மலை.
- செல்வி மேரி சாந்தினி ஜோர்ச் 72 யாட் அடைவீதி திருகோணமலை
- செல்வி அ.மேரி டிலானி இல: 20 கோனேசபுரம் உவர்மலை.
- செல்வி அ. தருஷி மேரி இல: 66 யாட்அடை வீதி, திருகோணமலை.
- செல்வி ஆன் நியோமி தேவன் இல: 25 பேராலயவீதி திருகோணமலை
- செல்வி ஆன்வஜிரா பிரிமஸ் இல:211/3, வித்தியாலயம் வீதி திருகோணமலை
- செல்வி ஜீட்லின் கெனடி இல: 15/12 சினேக் லேன் திருகோணமலை
- செல்வி ஆர் அப்சரா நிவேதி 3ம் வட்டாரம்,நிலாவெளி திகோணமலை
- செல்வி வி. விமல்சியா 3ம்வட்டாரம் நிலாவெளி, திகோணமலை
- செல்வன் அற்புதராதா டிறோன் 90/1 மத்திய வீதி, உவர்மலை
- செல்வி எஸ் லிவான்னா இல :41 புனித மரியாள் வீதி திருகோணமலை
- செல்வி ஆர்.ஜே எமில்ராஜ் இல:48 அந்தோனியார் வீதி நித்தியபுரி திருகோணமலை
- செல்வன் டிலுசன் குணசேகரன் இல 221 லூர்து அன்னை ஆலய வீதி பாலையூற்று திருகோணமலை
- செல்வன் டினிஷ் கிறேஷியன் கெனடி இல: 15/12 சினேக் லேன் திருகோணமலை
- செல்வி அ.தர்சனாமேரி இல: 66 யாட்அடை வீதி, திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தளாய் திரு இருதய நாதர் ஆலயப் பெருவிழா



## தூய மரியாள் பேராலய 121வது வருடாந்த திருவிழா



## பாலையூற்று அன்புவழிபுரம் தூய சதாசகாய அன்னை ஆலய 23வது வருடாந்த திருவிழா



## மறைமாவட்ட விவிலிய கட்டுரைப் போட்டி



## புடவைக்கட்டு தூய செபஸ்தியார் ஆலய திருவிழா



## அகில இலங்கை வேதாகம வினாவிடைப் போட்டியில் மறைமாவட்ட ரீதியில் நடைபெற்ற தமிழ், சிங்கள, ஆங்கில போட்டி 2014








## சிங்களமொழி இளைஞர்,யுவதிகள் மறையாசிரியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு 25.08.2014



## ஆண்டு 9 - 11 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கான 2வது விழிப்புணர்வுப் பயிற்சிப் பாசறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org